1980 ஜூலை 22]

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத் திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. இ. முத்துராமலிங்கம்: தலைவரவர்களே, 1964-ல் இருந்து ஒவ்வொரு முறையும் இத் திட்டம் ஆய்வில் இருக்கின்றது என்ற பதில்தான் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே நடப்பாண்டிலேயாவது இத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 78.5 லட்சத்தில் பூர்வாங்கத் திட்டம் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டது. அதன்படி எவ்வளவு ஏக்கருக்கு பாசன வசதி கிடைக்கும் என்றெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு திரும்பவும் வேறு ஏதாவது அதிகமான இடங்களுக்கு நீர் கிடைப்பதற்கான சாத்தியக்கூறு இருக்கின்றதா என்பது குறித்தும் மறு ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். அந்த ஆய்வு விரைவிலே முடிந்துவிடும். அதன் பிறகு அரசு இத்திட்டத்தை மேற்கொள்ளலாமா என்பது பற்றி முடிவு செய்யும்.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, இத்திட்டத்தினால் சுமார் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, திட்டமே இன்னும் ஆய்வில்தான் இருக்கின்றது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அந்த பூர்வாங்க திட்ட அறிக்கையின் படி 300 ஏக்கர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். ஏற்கெனவே பாசன வசதி பெற்று வருகின்ற 390 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதி செய்யப்படும். மற்றும் 660 ஏக்கர் நிலத்திற்கு ஒரு போகத்திற்கு நீர் விடுவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கின்றது.

தஞ்சை மாவட்டத்திற்கு மின்சக்தி வழங்கல்.

* கு. கா. வி. எண் 32—திரு எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் மின்சக்தி பற்றாக்குறையை போக்க தூத்துக்குடி அனல்மின் நிலையத்தின் மின்சாரம்கொண்டு வரும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) : தூத்துக்குடி அனல்மின் நிலையம் உற்பத்தி செய்யும் மின்சாரம் உட்பட தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதும் பொதுவான ஒரு இணைப்புடன் (common grid) சேர்க்கப்பட்டு மின்பங்கீட்டு (load centres) இடங்களுக்கு அனுப்பப்படுகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலிருந்து திருவாரூருக்கு மின்சாரம் கொண்டு வரும் பணியில் காரைக்குடி வழியாக வருவதற்கான லைன் அமைக்கும் பணி இன்னும் முடிவு பெறாமல் இருப்பதாகத் தெரிகிறது. அது எப்பொழுது முடிந்து மின்சாரம் வழங்கப்பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப் பெறுகிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மொத்தமாக எத்தனை ஜெனரேட்டர்கள் இருக்கின்றன. இரண்டாவது மின் உற்பத்தி திட்டம் ஆரம்பிக்கப்பெற்றுவிட்டதா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 210 மெகாவாட் கொண்ட 3 யூனிட்கள் நிறுவப்படும் என்பதுதான் இத்திட்டம். ஆக மொத்தம் 630 மெகாவாட். அதில் ஏற்கெனவே ஒரு யூனிட் இயங்க ஆரம்பித்து விட்டது. இரண்டாவது யூனிட் இந்த செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்திற்குள் வரும என்று எதிர்பார்க்கப்பெறுகிறது.

நீதித்துறையில் நடுவர் பதவிகளை ஒரு நிலைப்படுத்தும் திட்டம்.

*கு. கா. வி. எண். 33 திரு. மா. சின்னராசு : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீதித்துறையில் குற்றவியல் நீதிமன்றங்களில் இரண்டாம் வகுப்பு நடுவர்கள் (second class magistrates)—பதவியை முதல்